*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*03 07 2026 FRIDAY 7 15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*__தலைப்புச் செய்திகள்__*

*1. டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் கீழ், 110 கோடிக்கும் மேற்பட்ட கல்வி ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*2. பாதுகாப்பு தளவாடங்களுக்கான கொள்முதல் குழுமம் 52 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.*

*3. மக்கள் பிரதிநிதிகள் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.*

*4. பாகிஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர்.*

*5. இருபது வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*>>>>>>><<<<<<<*

*டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் கீழ், 110 கோடிக்கும் மேற்பட்ட கல்வி ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக செய்தி நிறுவனத்தில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.*

*கல்வி ஆவணங்களை எளிமையாக சரிபார்க்க இது உதவியுள்ளதாக பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*பாதுகாப்பு படைகளுக்கு வலுசேர்க்கும் வகையில், 52 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கொள்முதல் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பாதுகாப்பு தளவாடங்களுக்கான கொள்முதல் குழுமத்தின் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.*

*பாதுகாப்பு படைகளை நவீனமயமாக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*ஆந்திராவில், Totapuri மாம்பழ விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆய்வு செய்து களைவதற்காக உயர்நிலைக் குழு ஒன்றை அமைக்க மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் அறிவுறுத்தியுள்ளார்.*

*இந்தக் குழு சமர்ப்பிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>>><<<<<<<*

*மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் செயல்பட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.*

*மேற்குவங்க சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்பினை இன்று கொல்கத்தாவில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*சட்டப்பேரவைகளில் விவாதங்கள் ஆக்கபூர்வமாக அமைய வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.*

*அரசியலுக்கு அப்பாற்பட்டு, நாட்டு நலனை கருத்தில் கொண்டு மக்கள் பிரதிநிதிகள் செயல்பட வேண்டும் என்றும் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டார்.*

*>>>>>>><<<<<<<*

*ஆதார் கைபேசி செயலியை பயன்படுத்தி, இலவசமாக மின்னஞ்சல் முகவரியை மாற்றிக் கொள்ளலாம் என்று தனித்துவ அடையாள ஆணையம் அறிவித்துள்ளது.*

*இது, அடுத்த 6 மாதங்களுக்கு செயல்பாட்டில் இருக்கும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*கடந்த ஒன்றாம் தேதி முதல், இந்த வசதியை பயன்படுத்தி இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் தங்களது மின்னஞ்சல் முகவரியை மாற்றம் செய்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*தூய்மையான காற்று, ஆரோக்கியமான தில்லி இயக்கம் எட்டாயிரத்து 300 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளதாக தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா அறிவித்துள்ளார்.*

*இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலக வங்கி உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு அமைப்புகளின் நிதியுதவியுடன் இந்த இயக்கம் தொடங்கப்படும் என்று கூறினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இந்த இயக்கம் முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<<*

*20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோலை விற்பனை செய்யும் திட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் வலியுறுத்தியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், இதுதொடர்பாக பல்வேறு தரப்பினர் கவலை தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதனை கருத்தில் கொண்டு தமது கோரிக்கையை வலியுறுத்தி பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதவுள்ளதாகவும் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆறு நாள் அரசுமுறைப் பயணமாக இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடுகளுக்கு வரும் திங்கட்கிழமை புறப்பட்டு செல்லவுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.*

*பிரதமரின் இந்தப் பயணம், அந்நாடுகளுடனான நல்லுறவை மேம்படுத்த உதவிடும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>>><<<<<<<*

*நாட்டின் மாம்பழ உற்பத்தில் 26 சதவீதத்தை உத்தரபிரதேசம் கொண்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.*

*உத்தரபிரதேச மாம்பழ விழாவை, இன்று லக்னோவில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*இம்மாநிலத்தில் உள்ள 9 சதவீத வேளாண் நிலங்களில் மட்டுமே மாங்கனி சாகுபடி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.*

*வேளாண் உற்பத்தியை அதிகரிக்க தொழில்நுட்பங்கள் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. யோகி ஆதித்யநாத் வலியுறுத்தினார்.*

*>>>>>>><<<<<<<*

விவசாயிகளின் வருவாயை உயர்த்துவதில், கூட்டுறவு அமைப்புகள் முக்கியப் பங்கு வகிப்பதாக சத்திஷ்கட் முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோசாய் கூறியுள்ளார்.

இன்று ராய்ப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கால்நடை, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய மாநில அரசுகள் உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

நாகாலாந்தில் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கான 16 திட்டங்களை அம்மாநில முதலமைச்சர் திரு.. Neiphiu Rio இன்று தொடங்கி வைத்தார்.

கோஹிமாவில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் இத்திட்டங்களை தொடங்கி வைத்ததாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டங்களில் 12 திட்டங்கள் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுவதாகவும், எஞ்சிய 4 திட்டங்கள் கேலோ இந்தியா இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

மிஸோரமில் பார்வைத் திறன் குறைபாடு உடைய மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு வகைசெய்யும் ஒப்பந்த த்தில் அம்மாநில அரசு கையெழுத்திட்டுள்ளது.

Aizawl-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. Lalrinpuii தலைமையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் தனியார் பங்களிப்புடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

ஆந்திர மாநில உயர்நீதிமன்றத்திற்கு 3 கூடுதல் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, திருமதி. Sunitha Gandham, திரு. Alapati Giridhar, திரு. Purushottam Kumar Chintalapudi ஆகியோர் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<<

பாகிஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர், 8 பேர் காயமடைந்தனர்.

Quetta-விலிருந்து பெஷாவருக்குச் சென்று கொண்டிருந்த பேருந்து, Danasar அருகே பள்ளத்தாக்கில் கவிழந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாவட்ட காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விரிவான விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.

>>>>>>><<<<<<<

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் Muskan-ம், 50 கிலோ எடைப்பிரிவில் Parveen-னும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Manya Rajput வெள்ளிப்பதக்கம் வென்றார்.

55 கிலோ எடைபிரிவில் Kajal-ம், 59 கிலோ எடைபிரிவில் Komal-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>>>><<<<<<<

உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றது.

செக்குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் Sheetal Devi - Shyam Sunder Swamy இணை 147-143 என்ற

*புள்ளிக்கணக்கில் இந்தோனேஷியாவின் Ken Swagumilang - Teodora இணையை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.*

*மற்றொரு இறுதியாட்டத்தில் Bhawana - Harvinder Singh இணை, 6-2 என்ற புள்ளிக்கணக்கில் இந்தோனேஷியாவின் Kholidin - Noviera Ross இணையை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.*

*மகளிர் இரட்டையர் பிரிவில் Sheetal Devi – Payal Nag இணை வெண்கலப்பதக்கம் வென்றது.*

*>>>>>>><<<<<<<*

*செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் குகேஷ் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.*

*>>>>>>><<<<<<<*

*19 மற்றும் 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டி, ஜகார்த்தாவில் இன்று தொடங்கியது.*

*>>>>>>><<<<<<<*

*இலங்கைக்கு எதிரான, 19 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 49 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*புதுச்சேரியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஒவரில் 8 விக்கெட் இழப்புக்கு 209 ரன் எடுத்தது.*

*210 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இலங்கை அணி, 41 புள்ளி இரண்டு ஓவரில் 160 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*3 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை முதல் இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Syndrela Das - Divyanshi Bhowmick இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்த இணை 7-11, 11-7, 7-11, 11-8, 11-6 என்ற செட்கணக்கில் சீனாவின் Yao Ruixuan – Jiang Yiyi இணையை வென்றது.*

*>>>>>>>END<<<<<<<<*